# அலகு – 4

# TT0304 மொழியின் நடைமுறைப் பயன்பாடு

## இந்த அலகு என்ன சொல்கிறது?

குழந்தைகள் எழுதுதல் மற்றும் பேசுதலில் சிறந்து விளங்க குறிப்பெடுத்தல், விரித்து எழுதுதல், நிறுத்தல் குறிகளைப் பயன்படுத்தல், சமூக ஊடகங்களின் மொழி பயன்பாடு, பேச்சாற்றல் மற்றும் எழுத்தாற்றலை வளர்த்தல், இலக்கிய நயம் பாரட்டுதல் ஆகியவற்றைக் குறித்து ஆசிரியர் விரிவாக அறிந்துகொள்ள இவ்வலகில் விளக்கப்பட்டுள்ளன.

## இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- குறிப்பெடுத்து எழுத மாணவர்களை ஊக்கப்படுத்தலாம்.
- விரித்து எழுதுவதைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.
- மொழிசார்ந்த படைப்பாற்றலில் நிறுத்தற்குறிகளின் பயன்பாடு குறித்து அறிந்து கொள்ளலாம்.
- சமூக ஊடகங்களில் சுருக்கமொழிப் பயன்பாடு குறித்தும் அறிந்து கொள்ளலாம்
- மாணவர்களின் படைப்பாற்றலில் பேச்சாற்றல் உத்திகளை உணரலாம்.
- எழுத்தாற்றலை அறியும் முறையினைத் தெரிந்துகொண்டு விளக்கலாம்.
- ஒரு கவிதையைப் படித்துப் பார்த்து இலக்கிய நயத்தினை விளக்கக் கற்றுக்கொள்ளலாம்.

# பாட அமைப்பு


| | |
|---|---|
| **4.0** | **பாட முன்னுரை** |
| **4.1** | **குறிப்பெடுத்தலும் விரிவாக்கமும்** |
| 4.1.1 | குறிப்பெடுத்தல் |
| 4.1.2 | விரிவாக்கம் அல்லது விரித்து எழுதுதல் |
| 4.2 | **நிறுத்தற் குறிகள்** |
| 4.2.1 | விட்டிசைப்புக் குறிகள் |
| 4.2.2 | பொருள் தன்மைக் குறிகள் |
| 4.2.3 | பிரிப்பிணைப்புக் குறி |
| 4.2.4 | கணிதக் குறியீடுகள் |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **4.3** | **சுருக்கமொழிப் பயன்பாடு** |
| 4.3.1 | சமூக ஊடகங்களில் மொழி இயல்புகள். |
| **4.4** | **பேச்சாற்றலும் எழுத்தாற்றலும்** |
| 4.4.1 | பேச்சாற்றல் |
| 4.4.2 | எழுத்தாற்றல் |
| **4.5** | **இலக்கிய நயம் பாராட்டல்** |
| 4.5.1 | மொழிநடை |
| 4.5.2 | ஒலி |
| 4.5.3 | சொல் |
| 4.5.4 | தொடர் |
| 4.5.5 | பொருள் |
| 4.5.6 | விழுமம் |
| **4.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 4.0 பாட முன்னுரை

### பாட முன்னுரை

மொழி தகவல் தொடர்புக்கு மட்டும்தான் என்ற சிந்தனைப் போக்கு மாறி, அதன் பன்முக ஆளுமையினைக் கல்வியாளர்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர். மக்களின் வாழ்க்கையை எதிரொளிக்கும் கண்ணாடி 'மொழி' என்பதையும் தாண்டி மொழியானது வாழ்க்கை பயன்பாட்டை மட்டுமல்லாமல் எதிர்கால வாழ்க்கையினை வரையறுக்க துணையாகின்றது. சிந்தனையைக் கிளறுதல், நினைவாற்றலுக்குத் துணையாதல், பல பணிகளைச் செய்யும் திறனை மேம்படுத்துதல். கூர்மையான சிந்தனைக்குரிய ஊடகமாதல், பிற மொழிகள் கற்றலை வலுப்படுத்துதல், பிற பாடப்பொருள் கற்றலுக்கு ஊடகமாதல், இணைப்புத் திறனை மிகுதியாக்கல் போன்ற பல்வேறு நடைமுறைப் பயன்பாடுகள் மொழியால் பெறப்படுகின்றன. மொழியால் பெறப்படும் பயன்கள் அத்தனையும், அதில் பன்னெடுங்காலமாய் வளர்ந்தும் செம்மைப்பட்டும் வருகின்ற இலக்கியங்களாலும் பெறப்படுகின்றன. இவற்றுள் இன்றியமையாத சிலவற்றை இவ்வலகில், 1. குறிப்பெடுத்தலும் விரிவாக்கமும், 2. சுருக்கமொழிப் பயன்பாடு, 3. இலக்கிய நயம் பாராட்டல், 4. பேச்சும் எழுத்தும், 5. நிறுத்தல் குறிகள் ஆகிய தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளது.

## 4.1 குறிப்பெடுத்தலும் விரிவாக்கமும்

### குறிப்பெடுத்தலும் விரிவாக்கமும்

குறிப்பு–எடுத்தல் என்பது பின்னாளில் பயன்படுத்துவற்காக இன்றியமையாத தகவல்களைப் பதிவு செய்யும் முறையாகும். முறைப்படுத்தப்பட்ட முறையில், சொல் அல்லது தொடர்களில் சுருக்கமாக எழுதுவதாகும். மேடையில் கேட்கின்ற பேச்சினைப் பின்னர் தேவைக்கேற்ப விரித்து எழுதவோ, வகுப்பறையில் ஆசிரியர் கூறியவற்றை பின்னர் நினைவுபடுத்தவோ, உயர் அலுவலர் விரிவாக கூறிய தகவல்களைப் பணியாளர் பின்னர் தெளிவுற உரிய அமைப்பில் எழுத்தில் பதிப்பதற்கோ குறிப்பெடுத்தல் தேவையாகிறது.

### 4.1.1 குறிப்பெடுத்தல்

விரிவான ஓர் உரைப் பகுதியை அப்பகுதியில் வெளிப்படும் கருத்தின் அளவு குன்றாதவாறு, பகுதியின் அளவைக் குறைத்து எழுதுதல் 'சுருக்குதல்' எனப்படும்.

ஓர் உரைப்பகுதியைப் பொருளும் கருத்தும் மாறாதவாறு, அளவில் சுருக்கி எழுதுவதைச் 'சுருக்கி வரைதல்' என்றும், தொடர்ச்சி கெடாதவாறு சிறுசிறு சொற் கூட்டுகளால் எழுதுவதைக் 'குறிப்பு எடுத்தல்' என்றும் வேறு வேறு சொற்களால் குறிக்கலாம். இவ்விரண்டினையும் இணைத்துக் குறிக்கும் சொல்லே 'சுருக்குதல்' ஆகும்.

'சுருக்கி வரைதல்', 'குறிப்பு எடுத்தல்' ஆகிய இரண்டிற்குமுரிய வேறுபாட்டைக் கீழ்வரும் உரைப்பகுதி கொண்டு அறியலாம்.

> **"ஈ.வெ.ரா.வும் அவர் தோழர்களும் நீண்ட நாள் (3 மாதங்கள்) சுற்றுப்பயணம் செய்த நாடு ரஷ்யாதான். அங்கே 'சமதர்ம ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது? அந்நாட்டு மக்களின் நிலை எவ்வாறு உள்ளது? அவர்கள் அரசாங்கத்தைப் பற்றி என்ன நினைக்கின்றனர்? என்பனவற்றைத் தெரிந்து கொள்ளவே நீண்ட நாள் தங்கி, அரசாங்க விருந்தினராக இருந்து, அந்நாடு முழுவதும் 15, 20 பிரபல நகரங்களைச் சுற்றிப் பார்த்தனர்."**

எனும் பகுதியை,

> **"ஈ.வெ.ரா. தோழர்களுடன் 3 மாதங்கள் அரசு விருந்தினராக ரஷ்யப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள சமூக அரசியல் நிலைகளை அறிந்தார்."**

எனத் தருவது, 'சுருக்கி வரைதல்' ஆகும். இப்பகுதியை,

ஈ.வெ.ரா.வும் தோழர்களும் – 3 மாத ரஷ்யப் பயணம் – அரசு விருந்தினர் – சமூக அரசியல் நிலை அறிதல்"

எனத் தருவது, **'குறிப்பு எடுத்தல்'** ஆகும்.

**பொதுமேடைகளில் பேசுவோரின் பேச்சினைக் குறிப்பு எடுப்பதற்கு கீழ்க் குறித்த வழிகாட்டல்களைப் பின்பற்றலாம்.**

1. வாக்கியங்களாக இல்லாமல் முனைப்புத் தகவல்களை மட்டும் சொல் அல்லது தொடராகக் குறித்தல். கலைச்சொற்கள் வெளிப்படின் அவற்றைக் குறித்தல்.
2. கலைச்சொற்களைத் தவிர பிறவற்றைத் தம் சொந்த சொற்களில் குறித்தல்.
3. தலைப்புகள், துணைத்தலைப்புகள் மற்றும் எண்ணிடப்பட்ட பட்டியல்களுடன் குறிப்புகளைக் கட்டமைக்கவும், தலைப்புப்

பகுதிகளைக் குறிக்க அல்லது தகவல் வாயில்களின் விவரங்களைச் சேர்க்க தலைப்புகளைப் பயன்படுத்தவும் தேவையான புள்ளிகளை இடைகோடிட்டு சொல்லளவில் குறித்தல் வேண்டும்.

4. அமைப்பு, தகவலின் முதன்மையினைக் குறிக்க அடிக்கோடு அல்லது குறியீட்டு சின்னங்களைப் பயன்படுத்தவும்
5. முதன்மைத் தகவல், எடுத்துக்காட்டுகள், வரையறைகள் அல்லது பிற சிறப்புத் தகவலை அடையாளம் காண அடிக்கோடிட்டு, வட்டம், சதுரம், நட்சத்திரம் போன்றவற்றை தம் சொந்த அடையாளக் குறியீட்டாகப் பயன்படுத்தல்.
6. குறிக்கும்போது எதையாவது தவறவிட்டால், அதை நினைவுபடுத்துமாறு முதன்மையான சொற்களை எழுதவும், இடைவெளிகளை விட்டுப் பின்னர் அவற்றை நினைவுடுத்தல். உங்கள் சொந்த குறிப்புகள், கருத்துகளுக்கு ஓரக்கோட்டில் இடம் விடுதல்.
7. குறிகள் சொற்குறுக்கங்கள் முதலியனவற்றைப் பயன்படுத்துதல். அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்கள், சொற்றொடர்கள் அல்லது பெயர்களுக்கான சின்னங்கள் மற்றும் சுருக்கங்கள் வேகம் அவசியமாக இருக்கும்போது விரிவுரைகளில் குறிப்பு எடுப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும். சீராக இருக்க அச்சின்னங்கள் எதைச் சார்பு படுத்துகின்றன என்பதை நினைவில் வைத்து அவற்றை எளிதாகப் பயன்படுத்தலாம். அடிக்கடி பயன்படுத்தப்படும் சின்னங்கள்/ சொற்சுருக்கங்கள், சுருக்கச் சொற்கள் (abbreviation and acronym) அவை குறிக்கம் பொருள் பட்டியலை' வைத்துக்கொள்ளவும், இதன் வாயிலாக பிந்தைய சூழலில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

**எ.கா :**

பக்கம் – ப.

பக்கங்கள்– பக்.

மின்சார வாரியம் – மிவா.

பள்ளிக் கல்வி இயக்குநர் – பகஇ.

**குறிப்பெடுப்பதற்குப் பயனுள்ள குறியீடுகள் சில**

| குறியீடு | விளக்கம். எற்றுக்கொள்கிற |
|---|---|
| = | நிகர்த்த, நிகரான. |
| ≠ | நிகரில்லை. ஏற்றுக்கொள்ளாத |
| ≡ | அனைத்து நிலைகளிலும் ஏற்கக் கூடிய/ ஏற்கத்தக்க |
| ∴ | ஆகவே |

| குறியீடு | விளக்கம். எற்றுக்கொள்கிற |
|---|---|
| ∵ | ஏனென்றால் |
| + | மேலும், கூட்டுக, இணைக்க |
| _ | குறைந்த அளவு, நீக்குக |
| → | விளைவு |

இவை போன்ற பிற குறியீடுகளை வடிவமைத்துக் கொள்ளலாம்.

வளர் வரைவுகளையோ மன வரைடத்தையோ பயன்படுத்தலாம்.

தகவல்கள் ஓர் ஒழுங்குமுறையோடு வெளிப்படும் சூழலில் வளர்வரைவு பயன்படும். பிற சூழலில் மன வரைபடத்தைப் பயன்படுத்தலாம்

### மனவரை படம்




### 4.1.2 விரிவாக்கம் அல்லது விரித்து எழுதுதல்

'விரித்து எழுதுதல்' என்பது சுருக்குதலின் மறுதலையான செயலாகும். சுருக்கமான பத்தியையோ, உரைக் குறிப்பையோ கொண்டு, வேண்டுமளவிற்கு விளக்கமாக எழுதுதலே விரித்து எழுதுதலாகும். ஒரு கருத்து அல்லது செய்தியை நடுவணாகக் கொண்டு விரிவாக எழுதுதலும் விரித்து எழுதுதலேயாகும்.

## விரித்து எழுதுதலின் பயன்கள்

செய்தி விளக்கமும் தெளிவும் புலப்படும் வகையில் சிந்தனைக் கிளர்ச்சி, படைப்பாற்றல் துணை, கற்றல் பதிவு ஆகியன சார்ந்த பயன்பாடுகளை விரித்து எழுதும் திறன் கொண்டதாகும்.

## தகவல் விளக்கமும் தெளிவும்

குறைந்த அளவு பகுதியை விரிவாக எழுதும்போது தகவல்கள் விளக்கமாக எழுதப்படுகின்றன. தகவல்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதும் திறன் விரித்து எழுதுவதால் வளர்வதாகும். தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதும்போது சொல் தொடர் களஞ்சிய அறிவு பயன்பாட்டுக்கு வருகிறது. 'உறவு', 'நட்பு', 'அறிவு' ஆகியவற்றால் சொல்வட்டங்கள் விரிவடைகின்றன.

## சிந்தனைக் கிளர்ச்சி

விரித்து எழுதும்போது, வேர்ப்பகுதியைத் தெளிவோடும் விளக்கத்தோடும் எழுதுவதோடு விரித்தெழுதப்படும் பகுதிக்கூறுகள் தொடர்புடையனவாகவும் அமைதல் வேண்டும். இவ்வாறு அமைத்து எழுதும்போது, உரைப்பகுதியில் அடங்கிய பொருள் தொடர்பான பல தகவல்களைச் சிந்தித்துத் தொடர்புபடுத்த வேண்டும். தொடர்புபடுத்தி முறையாக எழுதும்போது சிந்தனை வளர்ச்சி ஏற்படுகிறது.

**'தந்தை பெரியார்தம் எழுத்தாலும் பேச்சாலும் தம் வாழ்நாளில் சமுதாயப் புரட்சியைக் கண்டார்'**

இப்பகுதியை விரித்தெழுதுவதாகக் கொள்வோம்.

**விரித்தெழுதப் பட்ட பகுதி,**

> **தந்தை பெரியாரின் எழுத்துகள் சமுதாயச் சீரமைப்புக் கருத்துகளைக் கொண்டதாகும். அனைவரையும் ஈர்க்க வல்ல சிறந்த பேச்சாளர் அவர். அவருடைய எழுத்துகளும் அத்தன்மையனவாகும். குடியரசு, விடுதலை, பகுத்தறிவு போன்ற இதழ்களில் அவர் எழுத்துகள் இடம் பெற்றன. அவருடைய பேச்சும் எழுத்தும் மக்களைக் கவர்ந்தன. அவர் எடுத்துரைத்த கருத்துகள் மக்கள் மனத்தில் பதிந்தன.**

வேர்ப்பகுதியையும் விரித்தெழுதப்பட்ட பகுதியையும் நோக்கும்போது, மூலப் பகுதியில் காணப்படும் செய்திகளைச் சார்ந்தவை பொருள் தொடர்போடு அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு எழுதுவதற்குப் பொருள் தொடர்புடைய செய்திகளைச் சிந்திக்க வேண்டும்.

### படைப்பாற்றல் துணை

விரித்து எழுதும்போது, கொடுக்கப்பட்டுள்ள சுருக்க வரைவுகளில், கருத்தளவிலும் மொழியளவிலும் புதிய பகுதிகளை இணைத்து எழுதுதல் வேண்டும். புதிய பகுதிகளைப் பொருத்தமாக இணைத்துப் பழக பழகப் படைப்பாற்றல் திறன் சிறிது சிறிதாக வளரும் வாய்ப்பு ஏற்படுகிறது. எந்தச் சூழலும் இல்லாமல் சிந்திப்பதைவிட, ஒரு சூழல் அடிப்படையில் சிந்தித்துக் கருத்துகளை வெளிப்படுத்துதல் எளிமையாகும். விரித்து எழுதும்போது தெரிந்த சூழலில், புதியனவும் பொருத்தமானதுமான மொழி அமைப்புகளும் செய்திகளும் இணைக்கப்படுவதால் சிந்தனை ஆற்றல் பெருகும் வழி பிறக்கிறது. அதன் அடிப்படையில் படைப்பாற்றல் திறன் வளர்கிறது.

### கற்றல் பதிவு

விரித்து எழுதும்போது, குறிப்பு வரைவுகளின் மொழிக் கூறுகளும் கருத்துக் கூறுகளும் நுணுகி நோக்கப்பட்டு, அவற்றிற்குப் புதிய வடிவம் கொடுக்கப்படுகிறது. குறிப்பு வரைவுகளில் அடங்கியன படித்தல் அளவிலே நின்றுவிடாமல், சிந்தனையையும் தூண்டுகிறது. இச்சிந்தனைத் தூண்டலால் கற்றவை அறிவளவில் நில்லாது. அதற்கப்பால் உணர்வையும் தாக்குவதால் 'கற்றல் பதிவு' ஏற்படும்.

"நான் கேட்கிறேன் மறந்து விடுகிறேன். நான் பார்க்கிறேன் நினைவில் கொள்கிறேன். நான் செயலில் ஈடுபடுகிறேன் புரிந்து கொள்கிறேன்" எனும் கல்வி நுட்பவியலின் கருத்தினையும் இங்கு நோக்கத்தக்கது.

### பழகு சூழல்கள்

விரித்து எழுதுதலில் பல சூழல்கள் உள்ளன. ஒருவரின் மேடைப் பேச்சைக் கேட்கும்போது, அவர் பேசுவதைக் குறிப்பு எடுத்துக் கொண்டு, பின்னர் விரித்து எழுதும் நிலை ஏற்படலாம். குறிப்பு எடுத்தவரே விரித்து எழுதும்போது, பேச்சில் கேட்டவற்றை நினைவுபடுத்தி விரித்து எழுதலாம். இச்சூழல் முழுமையாக விரித்து எழுதும் திறன்பாற் பட்டதன்று. மேலும், தற்காலத்தில் சுருக்கெழுத்து,

ஒலிப்பதிவு போன்ற முறைகளால் குறிப்பு வரைவு இல்லாமலே மூலப் பகுதியைக் கொண்டுவர இயலும். இப்பகுதியில் 'விரித்து எழுதுதல்' எனக் குறிக்கப் பெறுவது மேற்குறித்த சூழல் சார்ந்ததன்று. சுருக்கி எழுதப்பட்டுள்ள ஒரு பகுதியையோ, மூலமாகக் கொண்டுள்ள ஒரு பகுதியையோ விரித்து எழுதும் செயலைக் குறிக்கும்.

கல்விக் காலத்தில், சுருக்கி எழுதும் பயிற்சிகள் வழங்கப்படும்போதே, விரித்து எழுதும் திறன் ஓரளவு வளர்கிறது எனலாம். சுருக்கி எழுதுதலில் கண்டறியப்பட்ட கூறுகளுள் 'முனைப்புச் செய்திகளைத் தொகுத்தல்' ஒன்றாகும். முனைப்புச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொன்றையும் தொடர்புடையதாக்கி விரிவாக எழுதும் திறனை வளர்க்க மேற்கொள்ளப்படும் முறைகளே இத்திறனை வளர்க்கும் பழகு நிலைகளாகும். இப்பழகு முறைகள் மொழிச் சார்பாகவும் செய்திச் சார்பாகவும் இருவகைப்படுத்திக் காணலாம்.

### மொழிச் சார்பு

விரித்து எழுதுதலில், மொழி அமைப்புகளைத் தேவைக்கேற்ப மாற்றி எழுதும் நிலை ஏற்படும். சொற்களைச் சொற்றொடர்களாகவும் சொற்றொடர்களை வாக்கியங்களாகவும் எழுதலாம். சொற்களுக்கு அடைகளாகச் சொற்களையோ, சொற்றொடர்களையோ எழுதும் தேவையும் ஏற்படலாம். புதிய சொற்களையும் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

**'சமுதாயச் சீர்க்கேடுகளைப் பெரியார் எடுத்துரைத்தார்'** என்பதை விரித்தெழுதும் போது,

> **இன்றைய சமுதாயத்தில் சீர்கேடுகள் மலிந்திருந்தன. அவை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருந்ததை உணர்ந்து அவற்றைக் களைந்தெறியும் வழிமுறைகளைப் பெரியார் மக்களுக்கு எடுத்துரைத்தார்.**

என அமையலாம்.

விரித்து எழுதப்பட்ட இப்பகுதியில், சில சொற்கள், வேர்ப்பகுதியில் உள்ள சொற்களுக்கு அடைகளாக வந்துள்ளன (இன்றைய); கருத்து விளக்கம் பெறப் புதிய சொற்களும் வாக்கியங்களும் எழுதப்பட்டுள்ளன (மலிந்திருந்தன. அவை.....); சில சொற்களுக்கு அடைகள் சேர்க்கப்பட்டுள்ளன (களைந் தெறியும்....).

இவ்வாறு அளவு, கருத்து விளக்கம் ஆகியவற்றிற்கேற்ப மொழி வடிவங்கள் விரித்து எழுதும் பகுதியில் சேர்க்கப்படுகின்றன.

மொழிப் பயிற்சியில் தரப்படும் 'வாக்கிய மாற்றம்', வாக்கியங்களைத் தொடராக மாற்றுதல், 'சொற்களுக்கு விளக்கம் தருதல்' போன்றன விரித்தெழுதுதற்குரிய தொடக்க நிலைச் செயல்களாகும்.

### தகவல் சார்பு (செய்திச் சார்பு)

மொழிசார்பாக அடைகொடுத்து எழுதுதல், பொருள் விளக்க வாக்கியங்களை எழுதுதல் போன்றன இடம் பெறுகின்றன. இவற்றை முறையாகப் பொருள் விளக்கத் தொடர்ச்சியோடு எழுதுவதற்குக் குறிப்பு வரைவில் உள்ள சொற்கள், தொடர்கள், சொற்றொடர்கள் (வாக்கியங்கள்) ஆகியன இன்றியமையாதன வாகும். செய்தி அறிவு முழுமையும் குறிப்பு வரைவிலிருந்து பெறப்படுவதில்லை.

மொழிப்பாடங்களின் கற்பிப்பு என்பது பதவுரை, பொழிப்புரை, சொற்பொருள் போன்ற அளவிலேயே அமைந்தால், மாணவர்கள் விரிவான தகவல்களைப் பெறவியலாது. எனவே, வரிகளுக்கு மட்டும் பொருள் கூறுவதைத் தவிர்த்து, வரிகளுக்கும் வரிகளுக்கு அப்பாலும் சென்று அவற்றைக் கற்பிக்க வேண்டும். இத்தகைய கற்பிப்பே, விரித்து எழுதும் திறனை வளர்க்கத் தக்க அடிப்படையாக அமையும்.

முன்பகுதியில் கொடுக்கப்பட்ட உரைப்பகுதியில் 'சமுதாயச் சீர்கேடுகள்' என்பதன் தன்மை விரித்தெழுதும் பகுதியில் விளக்கம் பெற்றுள்ளது. **'எடுத்துரைத்தார்'** எனும் சொல்லும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் 'பெரியார்' எனும் பெயரைப் **'பகுத்தறிவுப் பகலவன்'** எனும் அடையுடனோ, **'மக்களை நல்வழிப்படுத்தும் நாட்டங்கொண்ட'** என அடைத்தொடருடனோ எழுதலாம்.

விரித்து எழுதுதலுக்காகத் தொடக்க நிலையில், சிறு சிறு வாக்கியங்கள், தொடர்கள், சொற்கள் ஆகியனவற்றை விரித் தெழுதும் பழகு செயல்கள், தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுப் பின்னர் பத்தி அளவில் மாணவர்களை எழுத சொல்ல வேண்டும்.

## 4.2 நிறுத்தற் குறிகள்

### நிறுத்தற் குறிகள்

ஆங்கில மொழியிலுள்ள Punctuations எனும் சொல்லுக்கு இணையாக 'நிறுத்தற் குறிகள்' எனும் சொல் வழங்கப்படுகிறது. ஆங்கில மொழித் தாக்கத்தால் தமிழில் ஏற்றுக் கொள்ளப்பட்டனவற்றுள் ஒன்று நிறுத்தற் குறிகளாகும். நிறுத்தற் குறிகள் தொடர்பான விதிமுறைகள் 'குறியீட்டு இலக்கணம்' எனப்படும். இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழில் இடம்பிடித்துள்ள குறியீட்டு இலக்கணம் பற்றித் தமிழறிஞர்கள் சிலர் வகைதொகை செய்து, நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தும் முறைகள் பற்றிய கருத்துகளை ஆங்கில இலக்கணம் தழுவித் தந்துள்ளனர். எனினும் இவற்றை எடுத்தாளுவதில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றைப் போக்க, மொழியில் நிறுத்தற் குறிகள் பயன்படுத்தும் போக்கினைப் பகுத்தாய்ந்து, குறியீட்டு இலக்கண விதிகள் இப்பகுதியில் தரப்படுகின்றன. நிறுத்தற் குறிகள் அனைத்தும் வாக்கியங்களில் பயன்படுவனவாகும்.

தமிழில் வழங்கப்படும் நிறுத்தற்குறிகளை, விட்டிசைப்பு, பிரிப்பிணைப்பு, பொருள்தன்மை, மேற்கோள், பிரிப்பொலிப்புக் கணிதத் தன்மை ஆகியனவாகப் பகுக்கலாம்.

### 4.2.1 விட்டிசைப்புக் குறிகள்

முறையான பொருள் வெளிப்பாட்டிற்காக வாக்கியப் பகுதிகளைப் பிரித்துக் காட்டவும் அவற்றை விட்டிசைத்து ஒலிக்கவும் எடுத்தாளப்படுகின்ற அடையாளங்கள். விட்டிசைப்புக் குறிகளாகும். கீழ்வரும் அட்டவணை அவற்றின் பெயர்களையும் அடையாளங்களையும் தருகிறது.

| எண் | பெயர் | அடையாளம் |
|---|---|---|
| 1. | முற்றுப்புள்ளி | . |
| 2. | முக்காற் புள்ளி | : |
| 3. | அரைப் புள்ளி | ; |
| 4. | காற்புள்ளி | , |

- **முற்றுப் புள்ளி ( . )**

வாக்கிய முடிவைக் காட்டுவது முற்றுப் புள்ளியாகும். வாக்கியம் முடிவுற்றது எனக் காட்ட, அதன் இறுதி எழுத்தின் வலது கீழ் மூலையில் இடப்படும் புள்ளி இது.

எ–டு:

ஆதன் விளையாடுகிறான்.

புள்ளியினை இடும் சூழல் நோக்கி 'முற்றுப்புள்ளி" என்றும் சுருக்கக் குறியீடு கொள்ளப்படும்.

ஓர் எழுத்தின் பின்னால் வலப்புறக் கீழ் மூலையில் புள்ளி சுருக்கக் குறியீடாகிறது. 'பிச்சமுத்து பசுபதி' எனும் பெயர். 'பி. பசுபதி' என எழுதப்படும்போது 'பி' என்பதை அடுத்து அமையும் புள்ளி, 'சுருக்கச் குறியீடு ஆகும்.

எழுதும் நிலையில் மட்டுமன்றி, எழுதியதைப் படிக்கும் நிலையிலும் முற்றுப்புள்ளி மொழியில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. படிக்கும்போது ஒவ்வொரு வாக்கியமும் நிறுத்தத்துடன் படிக்கப்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாகவும் முற்றுப் புள்ளி அமைகிறது. நிறுத்தல் கால அளவிற்குக் குறிப்பிட்ட வரையறை இல்லை. எனினும் முற்றுப்புள்ளிக்கு நிறுத்தல் கால அளவினை இரு மாத்திரையாகக் கொள்ளலாம்.

- **முக்காற்புள்ளி (:)**

' : ' என்பது முக்காற் புள்ளி. முக்காற்புள்ளி வரும் இடங்கள் வருமாறு:

1. வாக்கியத்தில் கூறியதொன்றை விரித்துக் கூறும்போது 'முக்காற்புள்ளி இடவேண்டும்.

எ–டு:

பகுத்தறிவு இயக்கத் தோன்றல்கள் இருவர்: ஒருவர் ஈ.வெ.ரா. பெரியார்; பிறிதொருவர் அறிஞர் அண்ணா.

2. முக்காற் புள்ளியுடன்':–' என இடைக் கோடிட்டு எழுதலுமுண்டு. இக்குறியும் முக்காற்புள்ளி யென்றே கொள்ளப்படும்.

எ–டு:

பொருள் கூறுக:– கவின், பரி, மா.

3. 'முக்காற்புள்ளி' மேற்கோளைக் குறிக்கும். சூழலிலும் எடுத்தாளப்படுகிறது.

எ–டு:

குறள் அதிகாரம் 10:8 (பத்தாவது அதிகாரத்தில் எட்டாவது குறள் எனக் குறிக்க முக்காற் புள்ளி பயன்படுத்தப்படுகிறது)

4. வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்கவோ அதற்கு இசைந்த இன்னொரு கருத்தைக் குறிக்கவோ 'முக்காற்புள்ளி இடப்படுகிறது.

எ–டு:

அ) உடல் நலத்தைப் பாதுகாக்க எல்லா வகைகளிலும் முயல்க: உடல் நலம் இல்லையே... (முக்காற்புள்ளி இடப்படுகிறது)

ஆ) அவன் எப்போதும் பிறருக்கு உதவி செய்தான் – விளைவு: எல்லாம் அவனுடைய ஊராயின. முக்காற் புள்ளிக்கு நிறுத்தல் கால அளவு ஒரு மாத்திரை எனக்கொள்ளலாம்.

- **அரைப்புள்ளி (;)**

' ; ' என்பது அரைப்புள்ளி, தற்கால எழுத்துகளில் 'அரைப் புள்ளி' மிகுதியும் பயன்பாடுடையதாகத் திகழ்கிறது.

1. வாக்கியத்தில் ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொள்ளுமாயின், ஒவ்வொரு சொற்றொடர் நிறைவிலும் அரைப்புள்ளி இடப்படும். எ–டு: மனித வாழ்க்கை ஓர் ஆறு; குளமன்று.
2. 'எனென்றால்', 'ஏனெனில்' போன்ற ஏது இணைப்புச் சொற்களுக்குமுன் அரைப் புள்ளி இடல் வேண்டும். எ–டு: என்னால் இன்று வரவியலாது; ஏனெனில், இன்று எனக்குப் பிறிதொரு பணி உள்ளது.
3. ஒரு வாக்கியத்திற்குப்பின் சுட்டுச் சொல்லோ, தோன்றா எழுவாயோ எழுவாயாக அமைய நேரிடின், அவ்வாக்கியத்திற்கு முற்றுப்புள்ளி இடாமல், அரைப் புள்ளி இட்டு வாக்கியத்தைத் தொடரலாம்.

எ–டு:

அ) மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும்; இது செழுமையான பகுதியாகும்.

ஆ) காந்தியடிகள் தமக்காக ஒருநாளும் கவலை கொண்டதில்லை; நாட்டு முன்னேற்றத்தையே எண்ணினார்.

4. ஒன்றுக்கொன்று மாறான கருத்துகொண்ட சிறிய சிறிய வாக்கியங்கள் சேர்ந்து முழுக்கருத்தை விளக்குமானால் ஒவ்வொரு சிறு வாக்கியத்தின் பின்னரும் அரைப்புள்ளி இடல் வேண்டும்.

எ–டு:

மலர்களோ, மோந்தால் வாடும்; விருந்தினர்களோ, சிறிது முகம் கோணினும் வாடிவிடுவர்.

அரைப்புள்ளி, முற்றுப்புள்ளியைப் போன்ற பயனை உடையது. அரைப் புள்ளியிட்டு எழுதப்பட்ட வாக்கியம் தொடர் வாக்கியமாகும். அரைப்புள்ளி இடப்படும் இடத்தில் முற்றுப் புள்ளி இடப்படின், அத்தொடர் வாக்கியம் தனி வாக்கியங்களாக மாறும். அரைப் புள்ளியின் நிறுத்தல் கால அளவு, அரை மாத்திரையாகக் கொள்ளலாம்.

- **காற்புள்ளி ( , )**

' , ' என்பது காற்புள்ளி. அரைப் புள்ளியைக் காட்டிலும் மிகுதியான மொழிப் பயன்பாடுடையது காற்புள்ளி.

1. சொற்களைத் தனித்தனியாகவோ, அடுக்கு அடுக்காகவோ பிரிக்கும்போது காற் புள்ளி இடல் வேண்டும்.

**எ–டு:**

அறம், பொருள். இன்பம் ஆகிய மூன்று பால்களைக் கொண்டது திருக்குறள்.

இவ்வெடுத்துக்காட்டில் மூன்று சொற்கள் பிரித்துக் காட்டப்படுகின்றன. இவற்றில் முதலிரு சொற்களுக்குப் பின்னரே காற்புள்ளி இடப்படுகிறது.

குறிப்பு : 'சேர சோழ பாண்டியர்' என உம்மைத் தொகையாக எழுதும்போது காற்புள்ளி இடல் வேண்டாம். 'சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர்' என எழுதும்போது முதலிரு பெயர்களை அடுத்து, காற்புள்ளி இடல் வேண்டும். உம்மை விரியாகச் 'சேரரும் சோழரும் பாண்டியரும்' என எழுதும்போது, பெயர்கள் 'உம்"ஆல் இணைக்கப்படுவதால் காற்புள்ளி இடத் தேவையில்லை.

வாக்கியத்தில் ஓர் எழுவாய் இருக்கப் பல பயனிலைகள் அமையும்போது ஒவ்வொரு சொற்றொடரை அடுத்தும் காற்புள்ளியைச் சிலர் பயன்படுத்துகிறார்கள். சொற்றொடர்களைப் பிரிக்க அரைப் புள்ளியினையே எடுத்தாளல் வேண்டும். காற்புள்ளியை எடுத்தாளுதல் கூடாது.

2. 'அதனால்', 'ஆகவே', 'எனவே' போன்ற ஏதுச் சொற்களை அடுத்துக் 'காற்புள்ளி' இடல் வேண்டும்.

**எ–டு:**

செய்யுளைக் கற்பிப்பது கடினம். எனவே, ஆசிரியர் முன் தயாரிப்புடன் செய்யுள் வகுப்பிற்குச் செல்லல் வேண்டும்.

3. விளிகளுக்குப் பின்னர் 'காற்புள்ளி' இடல் வேண்டும்.

**எ–டு:**

அ) கந்தா, புத்தகத்தை எடுத்துக் கொண்டு போ.

இவ்வாக்கியத்தில் 'கந்தன்' எனும் சொல்லை அடுத்துக் காற்புள்ளி இடப்பட்டுள்ளது. காற்புள்ளி இடாமல் எழுதப்படின் 'கந்தனுடைய புத்தகம்' எனும் பொருள் மயக்கம் ஏற்படும்.

ஆ) மாணவர்கள் அளித்த பரிசுகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர். இவ்வாக்கியம் 'மாணவர்கள். அளித்த பரிசுகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர்' என எழுதப்படின் பொருள் தெளிவு ஏற்படுகிறது.

4. ஆங்கிலமுறையில் 'முகவரி எழுதும்போதும், நாள் , திங்கள், ஆண்டு' என்பனவற்றைக் குறிக்கும்போதும் 'காற்புள்ளி. கீழே காட்டியவாறு பயன்படுத்தப்படுகிறது.

அ) திரு.இர.அருண்,
எண் 1378 மோயன் வளாகம்,
தூய வளவனார் நகர்,
கலிபோர்னியா மாநிலம்,
அமெரிக்க ஐக்கிய நாடு.

ஆ) ஏப்ரல் 15, 2001.

5. சொற்தொகுதி எழுவாயாக அமைந்தால் அச்சொற்றொடருக்குப் பின்னர் 'காற்புள்ளி' இடல் வேண்டும்.

**எ–டு:**

மாணவர்களால் நடத்தப்பெற்ற கூட்டம், மிகவும் சிறப்பாக நடந்தது.

6. பெரிய வாக்கியங்கள் இணைக்கப்படும்போது எண்ணும்மை இருப்பினும் 'காற்புள்ளி' இடல் வேண்டும்.

**எ–டு:**

நம்மில் ஒவ்வொருவருக்கும் நாடு காக்கும் கடமை உள்ள தென்றும், அக்கடமையிலிருந்து தவறினால் எதிர்காலத்தில் பல இன்னல்களுக்கு உள்ளாவோம் என்றும் அவர் கூறினார். காற்புள்ளியின் நிறுத்தல் கால அளவினைக் கால் மாத்திரையாகக் கொள்ளலாம்.

### 4.2.2 பொருள் தன்மைக் குறிகள்

வாக்கியங்கள் உணர்த்தும் பொருளுக்கேற்ப எடுத்தாளப்படும் அடையாளங்களும் நிறுத்தற் குறிகளாக உள்ளன. 'வினாக்குறி, உணர்ச்சிக்குறி, சொற்சுருக்கம், விடுகுறி, பிரிப்பிணைப்புக் குறி ஆகியன வாக்கியப் பொருள் தன்மையினை வெளிப்படுத்தும் குறிகளாகும்.

- **வினாக் குறி ( ? )**

'?' என்பது வினாக் குறியாகும். ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையின் அதற்கு இறுதியில் 'வினாக் குறி" இட வேண்டும்.

**'எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்**
**இரு வழியும் வினாவாகும் மே'**

என்பது நன்னூல் நூற்பா.

'எ, யா' ஆகிய எழுத்துகளை முதலில் கொண்டோ 'ஆ. ஓ' ஆகிய எழுத்துகளை ஈற்றில் கொண்டோ 'ஏ' எனும் எழுத்தை முதலிலோ, எற்றிலோ கொண்டோ வினாச் சொற்கள் அமையும். இவற்றுள் ஏதேனும் ஒன்று அமைந்த வினா வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி இடல் வேண்டும்.

**எ–டு:**

1. எவன் இங்கே வந்தான்?
2. இங்கே வந்தவர் யார்?
3. அவனா வந்தான்?
4. உழைப்பால் பெற முடியாதன உளவோ?
5. ஏன் நீ வரவில்லை?
6. 'ஏ' என்பதை இறுதியாகக் கொண்ட வினாச் சொல் தற்காலிக வழக்கில் இல்லை.

- **உணர்ச்சி வாக்கியக்குறி ( ! )**

' ! ' என்பது உணர்ச்சி வாக்கியக் குறியாகும். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டு மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியம் குறிக்கிறது. இம் மெய்ப்பாடுகளை உணர்த்துவதாக அமையும் வாக்கிய இறுதியிலோ, வாக்கியத்துள் அமையும் சொற்கள் இறுதியிலோ, உணர்ச்சிக்குறி இடுதல் வேண்டும்.

எ–டு:

1. அய்யோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே!
2. அவர் பெருமைதான் என்னே!
3. தலைவா, வருக! வருக!
4. உன்னால் முடியும் தம்பி !

உணர்ச்சி வாக்கியக் குறியை 'வியப்புக் குறி' எனக் குறிக்கின்றனர். 'உணர்ச்சி வாக்கியக் குறி' என்பதே முறையான மொழியாட்சியாகும்.

- **சொற்சுருக்கக் குறி ('.')**

சொற்சுருக்கம் "." எனப் புள்ளியிட்டுக் காட்டப்படும். எழுதும் போது சில மேற்கோள் நூல்களைக் குறிக்க நேரிடும். நூலின் பெயர்கள் நெடிதாக இருந்தாலோ, அவற்றை மீண்டும் மீண்டும் குறிக்க நேர்ந்தாலோ சொற் சுருக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

'தொல்காப்பியம்' என்பது 'தொல்.' எனச் சொற் சுருக்கத்தோடு எழுதப்படும். '.' என்பது 'தொல்' என்பதோடு சில எழுத்துகள் தொடருவதை உணர்த்துகிறது. எனவே, இதனைப் பொருட்தன்மைக் குறியாகக் கொள்ளலாம்.

- **விடுகுறி ('....')**

சொற்சுருக்கக் குறியைப் போன்றே விடுகுறியும் மறைத்தெழுதப்பட்டிருப்பதை உணர்த்துவதாகும். முன்னது எழுத்துகளின் மறைவினை உணர்த்தும். பின்னது சொற்றொடர் மறைவினை உணர்த்தும்.

எ–டு:

"திருந்திய மழலை பேசும், என்
செல்வங்களே, நன்றாகப் படியுங்கள்...
வாழ்க்கையில் உயருங்கள்" எனத்
தலைவர் கூறினார்.

"..." என மூன்று புள்ளிகள் இடப்பட்டுள்ளன. இவை விடுபட்ட மொழிகளைக் குறிப்பதாகும். மூன்று புள்ளிகள் மட்டுமே இடுவது ஆய்வு மரபாகும். செய்யுட் பகுதிகளில் விடுபட்டனவற்றைச் சீர்களின் அளவினைக் குறிக்குமாறு மூன்று புள்ளித் தொகுதிகளை இடுவது வழக்கம்.

எ–டு:

ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே
ஆற்றங் கரைச்சொற் கிழத்தி வாழியே
… .. … …
… .. … …
வாழி திசைக்கப் புறத்து நாற்கவி

### 4.2.3 பிரிப்பிணைப்புக் குறி ('–')

('–') என்பது பிரிப்பிணைப்புக் குறியாகும். பொதுவாகச் சொற்களைப் பிரித்தெடுத்தல் கூடாது. இடச்சுருக்கம் கருதி ஒரு வரிக்குள் சொல் அமையாத சூழலில் '–' எனும் இடைக் கோடு சொல்லைப் பிரித்தெழுதப் பயன்படுத்தப்படும்.

எ–டு:

தமிழகம் பல சிறப்புகளைக் கொண்டதெனினும் முற்காலத்தில் விரும்பத்தகாத நிகழ்வுகளும் நடைபெற்றன.

"பிரிப்பிணைப்புக் குறி அதனைத் தொடர்ந்து சொல்லின் பகுதி இருப்பதை உணர்த்துவதால் இது 'பொருட்தன்மைக் குறி' எனப்படுகிறது.

'பிரிப்பிணைப்புக் குறி' பிரிந்திருக்கும் வாக்கியங்களைப் பொருள் பொருத்தத்தோடு இணைக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

எ–டு:

நான் ஒன்று சொல்கிறேன் – அதையும்
இன்றே சொல்கிறேன். இது – நான் கூறுவது – சத்தியம்.

### மேற்கோள் குறிகள்

மொழியாட்சியில், பிறிதொருவரின் கருத்தையோ, மொழியையோ எடுத்தாளும்போது அது பிறிதொருவரின் கருத்து அல்லது மொழியெனத் தெரிவிக்கவோ, கூறப்படுவனவற்றிற்கு மிகை விளக்கம் தருவதற்காகவோ இடப்படும் அடையாளங்கள் 'மேற்கோட் குறிகள்' எனப்படும்.

இரட்டை, ஒற்றை, அடைப்பு ஆகியன மேற்கோள் குறிகளாகும்.

### இரட்டை மேற்கோள்குறி (" ")

(" ") என்பது இரட்டை மேற்கோள் குறி. ஒருவர் கூறிய சொற்களை, அவர் கூறியவாறே எடுத்தாளும்போது, அவர் கூறிய மொழிகளின் தொடக்கம், முடிவு ஆகிய இருபுறத்திலும் இரட்டை மேற்கோள்குறி இடல் வேண்டும்.

தலைவர், "மாணவர்கள் சிறந்தவர்கள்" என்று கூறினார். இக்குறி நேர்கூற்று வாக்கியங்களில் பயன்படுத்தப்படுகிறது.

ஒற்றை மேற்கோள்குறி (' ')

(' ') என்பது ஒற்றை மேற்கோள்குறி,

1. நேர்கூற்றுக்குள் இருக்கும் நேர்கூற்றினைக் குறுக்க ஒற்றை மேற்கோள்குறி இடல் வேண்டும்.

எ–டு:

பரதன், "நான் என் செய்வேன்! தந்தையார் 'நீ போ' என்று சொன்னாரே, அதனால் வந்து விட்டேன்" என்றான்.

2. ஏதேனும் ஒன்றைச் சிறப்பாக எடுத்துக்காட்ட, 'ஒற்றை மேற்கோள்' பயன்படுத்தப்படும்.

எ–டு:

'தொல்காப்பியம்' எனும் பழம்பெரும் நூல் இங்கே கிடைக்கும்.

3. எழுத்தையோ, சொல்லையோ, சொற்றொகுதியையோ வாக்கியப் பகுதியாகக் குறிக்க அதாவது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் போன்ற பகுதிகள் – 'ஒற்றை மேற்கோள் குறி' இடப்படுகிறது.

எ–டு:

'அ', 'ஆ', 'இ', 'ஈ' என்பன உயிரெழுத்துகள்.

• ' நான் இன்று வருவேன்' எனும் வாக்கியம் தனிவாக்கியமாகும். இதில் ஒரு வாக்கியமே எழுவாயாக அமைகிறது. எழுவாயாக அமைந்த வாக்கியம், தெளிவு கருதி ஒற்றை மேற்கோள் குறிக்குள் எழுதப்படுகிறது.

4. ஒற்றை மேற்கோளின் பிறிதொரு இன்றியமையாப்பயன்பாடு, குறிப்புப் பொருள் தருதலாகும்.

எ–டு:

நாகம் தீண்டியது. அதுவே அவளுக்கு 'எமன்' ஆகி விட்டது. 'இறந்துவிட்டான்' என்பதை 'மைன்' எனும் சொல் குறிப்பால் உணர்த்த ஒற்றை மேற்கோள்குறி பயன்படுகிறது. இக்குறிப்பு உயர்வு இழிவு, மரபு போன்ற பொருள்களில் அமையலாம்.

- **அடைப்புக்குறிகள் ( ), { }, [ ]**

( ), { }, [ ] என்பன அடைப்புக் குறிகள். இவை நிரலே பிறையடைப்பு, பகர் அடைப்பு, இரட்டை அடைப்பு என வழங்கபடுகின்றன. அடைப்பிற்குள் அடைப்பாகப் பயன்படுத்தும்போது உள் அமைவது பிற அடைப்பு, அதன் வெளியில் பகர அடைப்பு அமையும். அதற்கும் வெளியில் இரட்டை அடைப்பு அமையும்.

அடைப்புகள் எழுத்துப் பகுதியின் இடையே மேற்கோள் அல்லது விளக்கத்தினை உண்டாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

எ–டு:

1. நகை, அழுகை, இளிவரல்.... (தொல்காப்பிய பொருள்நூ. 246) போன்ற எட்டு மெய்ப்பாடுகளை இலக்கண நூல்களிலிருந்து அறியலாம்.

2. பெரியார் மீது அண்ணாவிற்கு ஏற்பட்ட மதிப்பு அவரை (அண்ணாவை) பகுத்தறிவுப் பணியில் ஈடுபடுத்தியது.

   ['அவர்' என்பது அண்ணாவைக் குறிக்கிறது என்பதைத் தெளிவு படுத்த ('அண்ணாவை') என அடைப்பிற்குள் எழுதப்பட்டுள்ளது] மேற்கூறிய விளக்கத்தில் (), [ ], ஆகிய இரு அடைப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதை நோக்குக.

### 4.2.4 கணிதக் குறியீடுகள்

கணிதத்திற்காகப் பயன்படும் சில குறியீடுகள் மொழிக் குறிகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், கணிதத்தில் அவை கொண்டுள்ள பொருண்மை, மொழிப் பொருண்மையிலிருந்து வேறுபட்டதாகும். எனினும் கணிதத்தின் பொருண்மை அடிப்படையில் தோன்றியதால், அவை கணிதக் குறியீடுகள் என்றே அழைக்கப்படுகின்றன.

மொழியில் பயன்படுத்தப்படும் கணிதக் குறியீடுகள் '+', '–', 'x', '/', '=' ஆகியனவாகும். இவை நிரலே, கூட்டல், (சரிவுக் கோடு) கழித்தல், பெருக்கல், வகுத்தல், நிகர்மைக் குறிகளாகும்.

- **கூட்டல் குறி ' + '**

'+' எனும் கூட்டல் குறி, 'சேர்ப்புக் குறி' என மொழிப் பயன்பாட்டில் அழைக்கப்படுகிறது. இக்குறி, புணர்ச்சிகளைக் காட்டப் பயன்படுத்தப்படுகிறது.

**எ–டு:**

1. பயிர் + ஆடியது
2. கல் + உடைந்தது.

- **கழித்தல் குறி ' – '**

'–' எனும் கழித்தல் குறி, இடைக்கோடாகவும் சொல்விளக்கக் குறியாகவும் இணைச் சொல் குறியீடாகவும் மொழியில் பயன்படுகிறது.

**எ–டு:**

1. பரணி – ஒருவகை இலக்கியம் (சொல்விளக்கம்)
2. இடைக்கோடு பற்றி முன் கூறப்பட்டுள்ளது.

- **பெருக்கற் குறி ' X '**

**எ–டு:**

1. மேலே x கீழே
2. வந்தான் x போனான்.

- **சரிவுக்கோடு குறி '/ ' , வகுத்தல் ' ÷ '**

" ÷ " என்பது வகுத்தல் குறியாயினும் கணிகைப் பயன்பாடு மிகுந்துள்ள இக்காலத்தில் '/' எனும் சாய்வுக் கோடே வகுத்தல் குறியாகக் கொள்ளப்படுகிறது. இது மொழியில் 'அல்லது' எனும் பொருளைத் தரும் பொருட்தன்மைக் குறியாகப் பயன்படுத்தப்படுகிறது.

**எ–டு:**

1. அவன் / அவள் வந்தபோது இதைக் கொடுக்கவும்.
2. நான் சொன்னேன் / சொல்லுகிறேன்.

- **நிகர்மைக் குறி ' = '**

' = ' எனும் நிகர்மைக் குறி புணர்ச்சி நிலைகளைக் காட்டவும், இணைச் சொல்லைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

**எ–டு:**

1. பூனை + குட்டி = பூனைக்குட்டி
2. மச்சு = மேல்தனம்.

- **தருகுறி ' → '**

' →' போன்ற அம்புக்குறி 'தருகுறி' எனப்படும். இதுவும் புணர்ச்சி நிலையில் நிகர்மைக் குறிக்கு மாற்றியாகப் பயன்படுத்தப்படுகிறது.

**எ–டு:**

1. அவன் + கு → அவற்கு.
2. மச்சு = மேல்தனம்

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. குறிப்பெடுத்தல் என்றால் என்ன? |
| 2. விரித்து எழுதுதல் குறித்து எழுதுக. |
| 3. நிறுத்தற்குறி பயன்பாட்டினை விளக்குக. |
| 4. முற்றுப்புள்ளி என்றால் என்ன? |
| 5. கணிதக் குறியீடுகள் குறித்துக் கூறுக. |

## 4.3 சுருக்கமொழிப் பயன்பாடு

### சுருக்கமொழிப் பயன்பாடு

**குறுஞ்செய்தி** (Short Text Messages–SMS; 1984), **முகநூல்** ( Face book–2000), **புலனம் (Whatsup–2008)**, **வலையொளி** (You tube –2005), **பின்டரஸ்ட்** (Pinterest – 2005), **லிங்டின்** (LinkedIn – 2006), **படவரி** ( Instagram–2010), **ரெட்டிட்** (Reddit –2010), **அளாவி** ( We Chat– 2011), **ஸ்நாப்சாட்** (Snapchat –2012), TikTok (2016), **சுட்டுரை அல்லது கீச்சுரை** (Twitter–2013) என்பன

இந்நாளில் மேலோங்கிக் காணப்படும் சமூக ஊடகங்கள். இவற்றுள் ஒவ்வொன்றும் வெளியான ஆண்டுகள் அடைப்பிற்குள் தரப்பட்டுள்ளன. இவை சமுதாயத்திலுள்ள எல்லாராலும் எவ்வித இடருமின்றிப் பயன்படுத்த இயலுவதால் சமூக ஊடகங்கள் எனப்பட்டன.

சமூக ஊடகம் என்பது தகவல் தொடர்பு, சமூகம் சார்ந்த உள்ளீடு, உள்ளடக்கப் பகிர்வு, ஒத்துழைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இணையதளங்களின் பயன்பாடுகளுக்கான கூட்டுச் சொல்லாகக் கொள்ளப்படுகிறது. நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் பல்வேறு சமூகங்களுடன் தொடர்பில் இருப்பதற்கும் தொடர்புகொள்வதற்கும் மக்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

சமூக ஊடகங்கள் இந் நாட்களில் அவற்றைப் பயன்படுத்துவோரின் எளிமைப் பாட்டால் மிகவும் செல்வாக்குப் பெற்றுவருகின்றன. இவை எண்ணியல் நுட்பத்தால் வடிவமைக்கப்பட்டு அவை தகவல் தொடர்பின் பெரும் பங்கு வகிக்கின்றன. பிற தகவல் தொடர்பு ஊடகங்கள் போல் அல்லாமல் இவை சமுதாயத்திலுள்ள எல்லாராலும் பயன்படுத்த இயலுவதால் செல்வாக்குப் பெற்று வரும் அரிய தகவல் தொடர்புத் தளங்களாகும். ஒருவருக்கொருவர் தொலைதூரத்திலிருந்தும் தகவலைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்கின்றன. வேறு சொற்களில் கூறுவதானால், முழு உலகமும் நம் விரல் நுனியில் உள்ளது.

சமூக ஊடகங்கள் அனைத்தும் தகவல் தொடர்பு வாயில்களே. தகவல் தொடர்பில் மொழிக் கட்டமைப்புக் கருதத்தக்க தொன்றாகும். சமூக ஊடகங்களும் அவற்றுள் ஒவ்வொன்றின் எண்ணியல் இயல்புக்கு ஏற்ப மொழிக்கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. அது **"சுருக்கமொழி"** எனக் கொள்ளப்படுகிறது. இக்கட்டமைப்பில் காணப்படும் மொழி அமைப்பு இயல்புகள் இங்கு நோக்கப்படுகின்றன.

சமூக ஊடக மொழியானது சமூக ஊடக தளங்களில் தோன்றிய தனித்தன்மையான சொற்களஞ்சியம், தொடரியல் மற்றும் எழுதும் நடையினை விவரிக்கப் பயன்படும் சொல். இந்த மொழி அதன் முறைசாரா மொழி வெளிப்பாடு, வழக்கு மொழிப் பயன்பாடு, சுருக்கம் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது, பல சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் சுருக்கமாகக் கட்டமைக்கப்படுகின்றன.

தகவல் தருகின்ற வாயிலாகப் பயன்படுத்தப்படுகின்ற முகநூல், குறுஞ்செய்தி, புலனம், கீச்சுரை ஆகியனவற்றில் மொழியின் மூவகைச் செயன்மைகள் காணப்படுகின்றன. அவை , தன்னிலை ஊட்டம் அல்லது தகவல் தேட்டம், கற்றலூட்டச் செயல்பாடு, உணர்ச்சி செயல்பாடு என்பனவாகும்.

- **தன்னிலை ஊட்டம்**

முகநூல் வாயிலாக அதில் பதிவிடுபவர் தம் மனநிலையினை மறைமுகமாகவோ வெளிப்படையாகவே வெளிப்படுத்துவது ஒரு சூழ்நிலை அல்லது மன நிலையை விவரிக்கிறது. தகவலைப் பதிப்பவர் தான் உணர்ந்ததை தன் பதிவில் கூறுகிறார். தன் எரிச்சலை மறைமுகமாக வெளிப்படுத்துவதாகவும் அமையும்.

- **கற்றலூட்டச் செயல்பாடு**

கற்றலூட்டச் செயல்பாடு ஊடகத்தின் வாயிலாக அனுப்பப்படும் தகவல் யாருக்காக அனுப்பப்படுகிறதோ அவரை நேரடியாக ஈடுபடுத்துகிறது. இதனால் பெறுபவர் தகவலின் கற்றல் தாக்கத்திற்கு உள்ளாகிறார்.

- **உணர்ச்சி செயல்பாடு**

புலனம் போன்ற சமூகத் தொடர்பு ஊடகத்தின் வாயிலாக இன்றைய நிலையில் பலரும் தம் உணர்வுகளை தம் இருக்கையிலிருந்தே வெளிப்படுத்த இயலுகிறது. புலன வழி பேசுவனவற்றை பேசியவாறே பதிக்க இயலுகிறது. அதனால் தகவல் அதனைத் தருபவரிடமிருந்து அவர் உணர்ந்தவாறே வெளிப்படுகிறது.

### 4.3.1 சமூக ஊடகங்களில் மொழி இயல்புகள்

சமூக ஊடகங்கள் வாயிலாகத் தகவல்கள் காட்சி வாயிலாகவும் மொழி வாயிலாகவும் பகிரப்படுகின்றன. இவற்றில் பயன்படுத்தப்படும் மொழி, அளவுச்சுருக்கம், மொழியின் இலக்கண வரையறை தவிர்ப்பு, குறியீட்டுப் பயன்பாடு ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ளன.

#### அளவுச் சுருக்கம்

கீச்சுரை(twitter) நிறுவனம் தொடக்க காலத்திலிருந்தே அச்செயலியின் வாயிலாக அனுப்படுகின்ற தகவல்களுக்கு எழுத்துருக்(character) கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. தொடக்க காலத்தில் 140, பின்னர் 280. அதன் பின்னர் 1000 எழுத்துருக்களுக்கு இசைவிருப்பதால் தகவல் தருபவர் பல வழிகளில் மொழிச் சுருக்கத்தினை கையாளுகிறார். விவரிப்புக்கள் மிகுதியான விளக்கங்கள் அவற்றில் இடம் பெறுவதில்லை. இச்சுருக்கம் இத்தன்மையது என

வரையறுக்க இயலாதெனினும். பெறுபவரின் மொழிக் கொள்திறனுக்கு ஏற்ப அமையும்.

### படமொழிப் பயன்பாடு

படங்கள் வாயிலாகவே தகவல் பகிர்வு மேற்கொள்ளுவதற்காக வடிவமைப்பட்ட சமூக ஊடகங்கள் உள்ளன. படிவரி (Instagram), முக.உல் ரில்ஸ் (Reels) போன்ற செயலிகளை இதற்கு சான்றாக கொள்ளலாம். இவற்றின்வழி நிகழ்வுகள் அப்படியே காட்சிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுகின்றன. நேரடியாகப் பேசுவது, பாடுவது போன்ற அமைப்பில் இதன் செயலாக்கங்கள் விளங்குகின்றன. இதன் வாயிலாகக் குறு நிகழ்படங்களை உருவாக்கவும் பகிர்ந்துகொள்ளவும் இயலும். இது படவழி மொழி ஊடகமாகக் கருதப்படுகிறது,

## 4.4 பேச்சாற்றலும் எழுத்தாற்றலும்

### பேச்சாற்றலும் எழுத்தாற்றலும்

பேசுதல், எழுதுதல் ஆகியன அடிப்படை மொழித்திறன்களைப் பற்றி முந்தைய அலகில் கற்கப்பட்டது. பேசுதல் திறனில் வளர்ச்சி, முதிர்ச்சி, வலிமை, ஈர்ப்பு,. இலக்கிய எழில் ஆகியன அமையும்போது பேசுதல்திறன் பேச்சுத் திறனாகிறது. எழுதி வெளிப்படுத்தப்படும் தகவலில் மேற்கூறிய பண்புகளோடு கருத்துச் செறிவும் இணையும் போது எழுத்துத்திறன் வெளிப்படுகிறது. பேச்சுத் திறனும் எழுத்துத் திறனும் மொழியில் பெறத்தக்க உயர்நிலைத் திறன்காகும்.

### 4.4.1 பேச்சாற்றல்

### மொழிநடை

சொற்பொழிவில் இன்றியமையாது மொழித் தேர்வும் மொழிநடையும் ஆகும். சொற்பொழிவாற்றும்போது ஒவ்வொரு சொல்லும் முறையான பொருளினைத் தெரிவிப்பதற்கு அவற்றைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்ளுதல் வேண்டும். கேட்போரின் கவனம் சிதறாமலிருக்கும் படியான சொற்கள், சிக்கலற்ற தெளிவான மொழி வெளிப்பாடு ஆகியன சொற்பொழிவினை வளப்படுத்தும்.

### விரைவும் ஒலி ஒத்திசைவும் (Tempo & Rhythm)

'சொற்பொழிவாளரின் வாக்கியங்கள் நீண்டும் சுழன்றும் ஒலிக்கும்போது கேட்போரிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும். சிறந்த சொற்பொழிவாளர்கள்

தங்கள் சொற்களை வெற்று உரைகளால் வசனங்களில் வெளிப்படுத்த முடியும். வழக்கமான உரைநடைக்கு மாறாக இந்த வகை வெற்று வசனங்களை பின்பற்றும் போது புகழ்பெற்ற சொற்பொழிவாளர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் செல்வாக்கு பெற்றிருந்ததை அறியவியலும் பயனுள்ள பொதுப் பேச்சுக்கு அதன் சொந்த உரைவுள்ளது. அறியப்பட்ட எந்தவொரு சிறந்த பேச்சாளரின் உரை மேற்கோளும் அதன் தனித்தன்மையான ஒலிப்பு இனிமையினைக் கொண்டிருக்கும். சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்க நேரம் ஒதுக்கி அவற்றில் வெளிப்படும் ஒலிப்பு ஒத்திசைவினை உணரவியலும். சரளம், இடைநிறுத்தம், குரல் ஏற்றத் தாழ்வு போன்றன சொற்பொழிவாளர்களுக்கு உகந்த ஒலி ஒத்திசைவினைத் தருவனவாகும்.

### கருத்துகளின் குவிப்பு

அறிஞர் அண்ணா போன்றோரின் சொற்பொழிவுகளில், 'பொதுவான கருத்தில் தொடர் உண்மைகள் முன்வைக்கப்படுகின்றன. கருத்து, அதை நிறுவுவதற்கான எடுத்துக்காட்டுகள் அவற்றின் அடிப்படையில் முன்னிறுத்தப்படும் கருத்து என்ற அளவில் சொற்பொழிவின் படிநிலைகள் அமையவேண்டும். அப்போதுதான் கேட்போரைத் தம் வயப்படுத்தி தம் கருத்தின்பால் அழைத்துச் செல்லவியலும். பயனுள்ள சொற்பொழிவு ஓர் ஒளிமிக்க பிறைபோல் தோன்றி முழு நிலவாய் வளர்ந்து சொற்பொழிவாளரின் இலக்கினை அடையும்.

### ஒப்புமை

ஒரு பொருத்தமான ஒப்புமை (உவமை) , கருத்தியலாக அமைந்திருப்பதை புலம்படு காட்சியாக மாற்றவல்லது. இது கேட்பவரின் இயல்பான அறிவை ஈர்க்கிறது. அவர்களின் கற்பனையைத் தூண்டுகிறது, ஒப்புமைகள் 'ஒரு வரையறுக்கட்ட அல்லது நிலைநாட்டப்பட்ட உண்மையை எளிய மொழியில் மொழிபெயர்க்கின்றன.

சிறந்த சொற்பொழிவாளர்கள் ஒப்புமை கூறுவதில் தேர்ச்சி பெற்றவர்கள். ஒரு நல்ல ஒப்புமை அறியப்படாத அல்லது தெளிவில்லாத கருத்துகளை தெளிவாக்க வல்லது. நன்கு கட்டமைக்கப்பட்ட ஒப்புமையால், சொற்பொழிவு நுட்ப அடிப்படையில் சிறந்த கருத்தாடலை முன்னிறுத்தவியலும். அறிஞர் அண்ணா போன்ற சொற்பொழிவு வல்லுநர்களின் பேச்சில் ஒப்புமை மேலோங்கிக் காணப்படும்.

### உணர்வுச் செறிவு

கேட்போரின் உணர்வுகளில் பேச்சாளரின் கருத்தினைப் பதிக்க அவர்கள் சிந்தனை மட்டுமல்லாமல் உணர்வுகளும் கிளரப்படவேண்டும். மேலும் அவர்கள் உணர்வுகளை எதிரொளிக்கும் வெளிப்பாடுகள் உருவாகப் பேச்சாளாரிடம் பல்வேறு மெய்ப்பாடுகள் வெளிப்படவேண்டும்.. சொல்லில் பொதிந்துள்ள உணர்வு பேச்சாளரின் மெய்ப்பாடுகளிலும் வெளிப்படும் கேட்போர் அசைவில்லாப் பதுமைகள் ஆகிவிடுவர். அந்நிலையில் பேச்சாளர், கேட்போரை மந்திரத்திற்கு உட்பட்டோரைப் போன்று மயக்கவியலும்.

### ஆளுமை வீச்சு

உங்கள் ஆளுமையை வெளிப்படுத்துவது பேச்சாளரை மிகவும் பயனுள்ள தகவல் ஊட்டுபவராக ஆக்குகிறது, ஏனெனில் அது சொற்பொழிவாளரின் நம்பகத்தன்மையை மேம்படுத்துகிறது, பேச்சாளரோடு கேட்போர் இணைந்து அவர்பால் நம்பிக்கையினை வளர்த்துக் கொள்கின்றனர். அதனால் பேச்சாளரின் இலக்கு நிறைவேறுகிறது.

மேலும் கீழே தரப்படும் குறிப்புக்கள் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ வழிகாட்டும்.

பேசும் போது தன்னம்பிக்கையுடன் இருப்பதன் வாயிலாக பேச்சாளர் என்ன சொல்கிறீர்கள் என்பதைப் பற்றிய அறிவையும்; புரிதலையும் பார்வையாளர்களிடம் ஏற்படுத்தும்.

- பரிவுணர்ச்சி.
- கதைசொல்லல்.
- கேட்போரைத் தம் பார்வைக்குள் கொண்டுவருதல்.
- சிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிகளைக் கேட்டு அவற்றிலிருந்து பேச்சு வல்லமைக் கூறுகளள் பெறுதல்.
- சிறிய குழுவில் பேசிப் பழகுதல்.

### பேச்சுத் திறன்

பேச்சுத் திறன் சொற்பொழிவுத் திறன் என்றும் குறிக்கப்படும். சொற்பொழிவு திறன் என்பது ஒருவர் சரளமாகப் பேசும் திறன் ஆகும். சிறந்த சொற்பொழிவாளர்கள் பல திறன்களைக் கொண்டுள்ளனர், அவை பொதுவில்

ஈர்ப்புமிக்கவாறு தகவல்களை வெளிப்படுத்த வழிவகுக்கின்றன. சிறந்த பேச்சுத் திறன் கொண்ட எவரும் சிறந்த பொதுப் பேச்சாளராக முடியும்.

## சொற்பொழிவாற்றலின் சிறப்பு

கோடிக்கணக்கில் விற்பனையாகி பெரும் புகழ்பெற்ற ஆங்கில நூல் டேல் கார்னி என்பாரின் "Public Speech and Influencing People in Bussiness". "How to Win Friends and Influence People" என்பன பேச்சாற்றலின் சிறப்பினை விரித்துரைக்கின்றன. பேச்சாற்றலில் வல்லவர்கள் தாம் அவர்கள் ஈடுபட்டுள்ள துறைகளில் வல்லுநர்களாகக் கருதப்படுவர். இரண்டு அடிகளில் மக்களுக்கு தேவையான அனைத்து நெறிகளையும் கூறிய திருவள்ளுவர் சொல்லாற்றலின் மேன்மையினை,

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது. ( குறள் எண் – 647)**

எனக் கூறியுள்ளார்.

யாவரையும் தம் பேச்சாற்றலால் ஈர்த்த கிரேக்க அறிஞர் டெமாஸ்தனிஸ் சொற்பொழிக் கலையின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

பிளாட்டோ, அரிஸ்டாட்டில் வாழ்ந்த கி.மு. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கிரேக்க மன்னரும் அலெக்சாண்டரின் தந்தையுமான பிலிப் என்பாரைக் கதிகலங்க வைத்த பெருமை இவருக்குண்டு. உலக அளவில் புகழ் பெற்ற பேச்சாளர்களாக மார்ட்டின் லூதர் கிங், எட்மண்ட் பர்க், வின்சென் சர்ச்சில். நெல்சன் மண்டேலா. மாகாத்மா காந்தி. தந்தை பெரியார் முதலானோர் உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவாளர்களாகக் கருதப்படுகின்றனர். அடிமை இந்திய வரலாற்றில் என்றும் நினைக்கப்படுகின்ற மெக்காலெ தம் பேச்சாற்றலின் வாயிலாகத்தான் ஆங்கிலக் கல்வியை இந்தியாவில் புகுத்த முடிந்தது,

மக்களின் உள்ளங் கவர்ந்து உலகப் புகழ் பெற்ற தமிழ்ப் பேச்சாளர் அறிஞர் அண்ணா. இத்தகைய சிறப்பிற்குரிய மொழி ஆற்றலை மொழி கற்போர் பெறவேண்டும் என்னும் வேட்கையில் அவ்வாற்றலை வளர்த்துக்கொள்ளத் தக்க முறைகள் இங்கு நோக்கப்படுகின்றன.

### 4.4.2 எழுத்தாற்றல்

எழுதும் ஆற்றல் என்பது எழுத்துகளின் தெளிவு, அளவு, சொல் வாக்கிய இடைவெளி, அழகு முதலிய இயல்புகளைக் குறிப்பதாகும். இது அடிப்படை மொழித்திறன்களுள் ஒன்று. எழுத்தாற்றல் என்பது மொழியில் பெறத்தக்க உயர்நிலை ஆற்றலாகும். கட்டுரை, கவிதை, உரையாடல் போன்ற பல்வேறு இலக்கிய வடிவங்களில் படிப்போரை ஈர்ப்பதால் எழுதுதல் 'எழுத்தாற்றல்' எனப்படும். மொழி அறிவின் மேம்பட்ட நிலை இது. இவ்வாற்றல் ஆசிரியர்கள் பெற்றிருப்பின் மாணவரைத் தம்பால் ஈர்ப்பதற்கும் வலுவாகக் கருத்துணர்த்துவதற்கும் வழிவகுக்கும். பேச்சாற்றல் போன்று இவ்வாற்றலும் ஆசிரியர் பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பகுதியில் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் கட்டுரை, கதை, கவிதை ஆகியனவற்றைப் படைக்கும் வழிகாட்டல்கள் சுருக்கமாக வழங்கப்படுகின்றன.கட்டுரை எழுதும்பொழுது பொருள் ஒழுங்கு, சொல் தெரிவு, சிறு வாக்கிய அமைப்பு, பந்தி அமைப்பு, குறியீடுகள் உபயோகம் என்பவற்றில் கவனம் தேவை. மேலும் "தெளிவு, ஒன்றை நேராகக் கூறல், சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளை குறித்தல், குறிப்பாற் பொருளைச் சுட்டுதல்" போன்றன சிறந்த கட்டுரையில் அமையத்தக்க பண்புகள் ஆகும். செம்மையான கட்டுரையின் அமைப்பினைக் கீழுள்ள வரைவு காட்டும்.



## 4.5 இலக்கிய நயம் பாராட்டல்

### இலக்கிய நயம் பாராட்டல்

தமிழைக் கற்போருக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி, வாழ்ந்து வரும் இலக்கியங்களைக் கற்பதேயாகும். அவ்விலக்கியங்கள் அறிவு ஊற்றாய் ஓடி, பின் வந்த பெருமக்களையும் இலக்கியப் படைப்புப் பெரு வெள்ளத்தில் மூழ்கச் செய்து வருகின்றன. நாளும் பழமையின் பெருமையைப் பொதித்துப் புதியனவற்றை ஏற்றுத் தோன்றிவரும் இலக்கியங்கள் மொழியைக் கற்பிக்கச் சிறந்த தோற்றுவாயாகத் திகழ்கின்றன; கற்றோரை மொழிவல்லாராக உருவாக்குகின்றன. பெருமைக்கும் பயன்பாட்டிற்கும் உரிய இலக்கியங்களை, அவற்றைப் படைத்த பெருமக்கள் நோக்கிலிருந்தும், அவற்றால் பயன்பெறத்தக்க நெறியினின்றும் காண்பதே 'இலக்கிய நயம் பாராட்டல்' ஆகும். மொழியைக் காத்து, மொழியின் அவ்வப்போதைய நிலையைக் காட்டும் ஆடியாகத் திகழும் இலக்கியங்களின் நயத்தைப் பாராட்டும் அணுகுமுறைகளை மொழிநடை, பாடுபொருள் ஆகியனவற்றின் சார்பாக மேற்கொள்ளலாம்.

### 4.5.1 மொழிநடை

மொழியின் சிறப்பும் வல்லமையும் பல்வேறு கோணங்களில்முன் இயல்களில் கூறப்பட்டன. மாந்த இனத்தின் மதித்தற்கரிய படைப்பான மொழியின் அமைப்பை மொழியியலாளர் ஒலி, சொல், தொடர், பொருள் எனும் நான்கனுள் அடக்கி, அவற்றைப் பற்றிய வியத்த கருத்துகளைத் தந்துள்ளனர். மொழியால் அமைந்த இலக்கியங்களை, இந்நான்கு மொழிக்கூறுகளின் அடிப்படையிலும் நோக்கி, இலக்கியங்களின் பெருமைகளைக் காணலாம். இந்நான்கு கூறுகளும் ஒன்றுக்கொன்று பிணைந்தவையெனினும் இலக்கியத்தில் காணப்படும் மொழிநடைக் கூறுகளை நுணுகிக் காண்பதற்காக இந்நான்கு கூறுகளும் தனித்தனியே நோக்கப்படுகின்றன.

### 4.5.2 ஒலி

செய்யுளில் அமையும் ஒலி நயம் அதைப் படித்த அளவிலேயே இன்பம் தருவதாகும். இன்னோசையால் செவிக்கு விருந்தூட்ட இலக்கியப் படைப்பாளர்கள் ஒலி நயம் மிக்க சொல்லாட்சியை மேற்கொள்கின்றனர். இலக்கண நூல்கள் ஒலி நயத்தை மோனை, எதுகை, இயைபு என வகைப்படுத்தித் தருகின்றன.

**பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்க**
**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி**
**அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.**

ஒரு பெண்ணின் வருகையை வெளிப்படுத்தும் கம்பராமாயணச் செய்யுள் எதுகை ஒலியால் படிப்பதற்கு இன்பம் தருவதைக் காணலாம். இவ்வொலி நயத்தைப் படித்து இன்புறும் உணர்வைப் பெறும் மாணவர்கள், இதனுள் அமைந்துள்ள தொடைகளின் பெயர்களையும் தெரிந்திருப்பின் எவ்வெத்தொடைகளால் எத்தன்மையான ஒலிகளை ஏற்படுத்த இயலும் என்பதை அறிந்து இலக்கிய இன்பம் பெறுவர்.

### 4.5.3 சொல்

ஒலித்தொகுதியில் பொருள் குறியீடு அமைய, அவை சொல்லாகின்றன. சொல்லில் அமைந்துள்ள ஒலிநயம் ஒருபுறமிக்க ஒவ்வொரு சொல்லும் அது கொண்டுள்ள அமைப்பு, பொருள் இவற்றால் தனித்தன்மை கொண்டிலங்குவதாகக் காணலாம்.

**காணும் கண்ணிற்குப் பூணும் அணியாய்**
**நாணும் தங்கைக்கு எதுவும் ஈடோ**

என வரும் அடிகளை நோக்குவோம். கண்ணின் வேலை காணுதலே. காணும் திறனற்ற கண், 'கண்' எனக் கொள்ளப்படாது. எனவே, 'காணும் கண்' எனக் கூறுவது பொருத்தமில்லாமல் தோன்றுகிறது. எனினும் கண்ணின் பெருமையை உணர்த்தவே 'காணும் கண்' எனக் கவிஞர் கூறியுள்ளார். இதுபோன்ற சொல்லாட்சி 'சொல் நயம்' பாற்பட்டதாகும்.

சொல்லாட்சியில் சொற்கள் அவற்றிற்குரிய மொழியியல் பொருள், பண்பாட்டுப் பொருள், தனிப்பொருள் ஆகியனவற்றுள் ஒன்றையோ, பலவற்றையோ கொண்டிருக்கலாம். அவற்றைச் சொல்நயம் பாராட்டும்போது எடுத்துக்காட்டல் வேண்டும்.

### 4.5.4 தொடர்

தொடர்ச்சியான பொருளைத் தரும் சொல் தொகுதியே இங்குத் 'தொடர்' எனக் குறிக்கப்படுகிறது. தொடராட்சி, படைப்பாளனின் படைப்புத் திறனையும் உத்தியையும் எடுத்துக்காட்டவல்லது. இவற்றை இனங்கண்டு இலக்கியத்தைப் படிக்கும் போக்கு இலக்கிய இன்பத்திற்கு அடிகோலும்.

இன்தொடர்கள், பழமொழிகள், உவமைத்தொடர்கள், மரபுத்தொடர்கள் ஆகியன தொடர் சார்ந்த மொழி அமைப்புகளாகும்.

**நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்**

நாரையை அழைப்பதாக அமையும் இவ்வரிகளில் உவமைகளின் சிறப்புதான் என்னே! நாரையின் அலகு நீண்டது. காண்பதற்குக் கவர்ச்சியாக இருக்காது எனக் கூறலாம். ஆனால், சத்திமுத்தப் புலவர் 'பனையின் கிழங்கு பிளந்தன்ன' எனும் உவமைத் தொடரால் நாரையின் அலகை அழகுணர்வோடு காணச் செய்கிறார்.

### 4.5.5 பொருள்

இலக்கிய வரிகளில் வெளிப்படும் பொருள், படைப்பாளனின் சொன்முறையால் பொருள் நயம் எனப்படும். செய்யுளில் அமையும் கற்பனை, பொருள் செறிவு, சிலேடை போன்றன பொருள் நயத்தின்பாற்படும்.

சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படும் உள்ளுறை, இறைச்சி போன்றனவும், தண்டியலங்காரம் குறிக்கும் பொருளணிக் கூறுகளும், வருணனை போன்றனவும் பொருள் நயம் சார்ந்தனவாகும்.

வளம்மிக்க நாணு எனக் கூறுவந்த புலவர் திருத்தக்கத் தேவர், கற்பனை சார்ந்த வருணனையை,

**பாளைவாய் கமுகின் நெற்றிப் படுபழம் உதிர விண்டு**
**நீள்கழைக் கரும்பின் நெற்றி நெய்ம்முதிர் தொடையல் கீறி**
**வாளைவாய் உறைப்ப நக்கி வராலொடு மறலு மென்ப**
**காளைநீ கடந்து செல்லும் காமரு கவின்ஃகொள் நாடே** ...

எனும் செய்யுளில் தருகிறார்.

'பாக்கு தேன்கூட்டைச் சிதைத்துத் தேனைச் சொரியச் செய்கிறது. சொரிந்த தேனை அருந்திய வாளை மீன் பெரும் போதை கொண்டு வரால் மீனோடு சண்டையிடுகிறது' எனப் புலவர் கூறுவது, கற்பனை வளம் சேர்த்து நில வளத்தை வெளிப்படுத்துகிறது. புலவர் கூற்றில் புதுமை, படிப்போர்க்கு இனிமை, இத்தகைய மொழி நலனே பொருள் நயமாகும்.

### 4.5.6 விழுமம்

இலக்கியங்களைக் கற்பிப்பதால் மொழித்திறன் வளர்க்க இயலுவதுபோல, கல்வி விழுமங்களையும் மாணவர் உள்ளத்தில் பதிக்கலாம். ஒவ்வொரு இலக்கியமும் ஒன்று அல்லது பல உரிப்பொருள் (கருத்து) களை நடுவணாகக் கொண்டே படைக்கப்படுகிறது. சமயப் பூசல்களுக்கிடையே தோன்றிய தேவாரம், திருவாசகம் போன்ற பாடல்கள் இறைநெறியே உயர்நெறியாகப் போற்றினாலும், ஆங்காங்கே சமூகச் சீர்கேடுகளைச் சாடி படிப்பவர்களைச் சிந்திக்கச் செய்கின்றன. சிந்தனையின் செழுமை உணர்வாகி, விழுமங்களைப் பதிக்க வல்லன.

இலக்கியங்களில் அடங்கியுள்ள விழுமங்களைப் பட்டியலிட்டுக் காட்ட இயலாதவாறு எண்ணற்றவையாய்ப் பரந்து காணப்படுகின்றன.

திருக்குறள், சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள் ஆகியன ஒழுக்க நெறி, சமுதாய மேன்மை உணர்வு, இறையன்பு என்றவகையில் உரிப்பொருள்களைக் கொண்டு திகழ்கின்றன. இவ்வாறே ஒவ்வோர் இலக்கியம் அல்லது இலக்கியப் பகுதியும் விழுமங்களை உள்ளடக்கியதாய் அமையும். கற்பிக்கும் ஆசிரியர் அவற்றைக் கண்டறிவதோடு, அவற்றை மாணவர்களும் கண்டறியத்தக்கவாறு பாடுபொருள் சார்ந்து இலக்கிய நயம் பாராட்டச் செய்தல் வேண்டும்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை தனிமாந்தர் பண்பு, சமுதாய நலம் ஆகியன சார்ந்த விழுமங்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

- **தனிமாந்தர் பண்பு**

கல்வியின் மிகச் சிறந்த நோக்கங்களுள் ஒன்று, தனிமாந்தரைப் பண்படுத்தலாகும். நல்லொழுக்கம், தொண்டுணர்வு, உழைக்கும் எண்ணம், வாழ்க்கை நடைமுறை இயல்பு, அறிவு போன்றன தனிமாந்தரைப் பண்படுத்தும் விழுமங்களாகும்.

**உரத்தின் வளம் பெருக்கி உள்ளிய தீமைப்**
**புரத்தின் வளமுருக்கிப் பொல்லா மரத்தின்**
**கனக்கோட்டம் தீர்க்கும்நூ லஃதேபோல் மாந்தர்**
**மனக்கோட்டம் தீர்க்கும்நூல் மாண்பு.**

எனும் நன்னூலார் மொழி பொதுவாகக் கல்விக்கும் பொருந்துவதாகும். இலக்கியத்தைப் பொருள் சார்ந்து பாராட்டும் போக்கில், அதில் பொதிந்துள்ள தனிமாந்தர் பண்புகளைக் கண்டறியின் அப்பண்புகள் மாணவரிடத்துப் பதியும் நிலை ஏற்படும்.

**'என் கடன் பணி செய்து கிடப்பதே'**
**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**
**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'**
**'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'**

போன்ற இலக்கிய வரிகள் எத்துணை அளவு தனிமாந்தரைப் பண்படுத்தும் என்பதை உணரலாம்.

- **சமுதாய நலம்**

இலக்கியப் பாடுபொருள் சார்ந்து, தனிமாந்தர் பண்பாட்டை நோக்குவதுபோலச் சமுதாய நலனுக்கு இலக்கியம் எவ்வகையில் பயன்பாடுடையதாக விளங்குகிறது என்பதையும் நோக்குதல் வேண்டும். ஓர் இலக்கியத்தையோ, அதன் பகுதியையோ கற்கும் மாணவர்கள், அதன் சமுதாயப் பயனைக் கண்டறியும் திறன் உடையவர்களாக இருப்பின், சமதாய நலம் சார்ந்த விழுமங்கள் அவர்கள் உள்ளத்தில் பதியும்; சமுதாய மேன்மை சார்ந்த கல்வி நோக்கங்களும் நிறைவேறும்.

**கிழக்குச் சுவரில் சிவப்புக் கவிதையாய்**
**கதிரவன் வரைகின்றான்.**
**கீழிருப்பார் என்று விழிதிறப்பார் என்ற**
**கேள்வியில் வருகின்றான்**
**நாங்கள்**
**விடியல் கீதங்கள் பாடுகின்றோம்**
**விலங்குகள் நொறுங்கட்டும் கனவு**
**விலங்குகள் நொறுங்கட்டும்**
**வேர்வையின் மக்கள் விழித்தெழுவீர்**
**வேள்விகள் தொடங்கட்டும்**

'கதிரவனின் எழுச்சியில் மக்கள் விழிக்கின்றனர். விழித்த மக்களோ, விடியலைப் பற்றிப் பாடுகின்றனர். அவர்கள் விழிப்பு உடல்சார்ந்த விழிப்பே அன்றி, உள்ள விழிப்பாகாது! அறியாமை எனும் இருள் நீங்கவில்லை. உழைக்கும் மக்கள் விடியலைப் பாடுவதைத் தவிர்த்துச் செயலில் ஈடுபட்டு, அறியாமைத் தளையிலிருந்து விடுபட வேண்டும்' என்பதே இவ்வரிகளில் பொதிந்த சமுதாய நல எண்ணமாகும். சொற்களையும் சொற்பொருள்களையும் சமுதாய நல நோக்கத்தோடு நுணுகிக் காணும் திறனை மாணவர் பெறுகின்றபோது, அவர்கள் மனத்தில் சமுதாய விழுமங்கள் பதியும்.

## 4.6 தொகுப்புரை

### தொகுப்புரை

உயர்நிலைத் திறன்களாகக் குறுப்பெடுத்தலும் விரிவாக்கமும், நிறுத்தற் குறிகள் சுருக்கிமொழிப் பயன்பாடு, பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் இலக்கிய நயம் பாராட்டல், ஆகியவை இவ்வலகில் விளக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாணவர்களும் கற்க வேண்டிய சில திறன்களைக் காலத்திற்கேற்ப விளக்கப்பட்டுள்ளது. மொழியாட்சியில் நிறுத்தற் குறிகளும் எழுத்து, சொற்களைப் போன்ற பொருட் பொதிவுக்கும் வெளிப்பாட்டுக்கும் துணையாகின்றன. எனவே, மொழித் திறனில் நிறுத்தற் குறிகள் பற்றிய அறிவும் இன்றியமையாததாகிறது. எழுத்து சொல், சொற்றொடர் போன்றே நிறுத்தற் குறிகளும் மொழிக்கூறுகளாகக் கருதப்பட்டு, மொழித்திறன் வளர்க்கப்படும் தொடக்க நிலையிலேயே முறையாகக் கற்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு கற்று பேச்சாற்றலிலும் எழுத்தாற்றலிலும் மாணவர்கள் சிறந்து விளங்க ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

| **தன்மதிப்பீடு : வினாக்கள் – II** |
| --- |
| 1. சுருக்க மொழிப் பயன்பாடு காணப்படும் சமூக ஊடகங்களைப் பற்றி எழுதுக. |
| 2. தன்னிலை ஊட்டம் என்றால் என்ன? |
| 3. பேச்சாற்றல் பற்றிக் கூறுக. |
| 4. எழுத்தாற்றல் பற்றிக் குறிப்பு வரைக. |
| 5. இலக்கிய நயம் பாராட்டல் குறித்து விளக்குக. |
| 6. இலக்கியங்களில் காணப்படும் இருவகையான பண்புநலன்களைக் கூறுக. |